Permanent Mission of Canada
to the United Nations
and the World Trade Organization

Mission permanente du Canada
auprès des Nations Unies
et de l'Organisation mondiale du commerce

மார்ச் 20, 2019
மனித உரிமைகள் பேரவை
நாற்பதாவது அமர்வு

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 40 வது அமர்வுகளில் கனடாவின் இடையீடு

மனித உரிமைகளுக்கான உயர் ஆணையர் அலுவலகத்தின் அறிக்கை பற்றிய உரையாடல்,
**"இலங்கையில் மீளிணக்கம், பொறுப்புக்கூறல், மனித உரிமைகள் என்பவற்றை மேம்படுத்தல்"**

*கனடிய பாரம்பரிய மற்றும் பல்கலாச்சார அமைச்சரின் பாராளுமன்ற செயலாளர் கேரி ஆனந்தசங்கரி அவர்களால் வழங்கப்பட்டஇடையீடு:*

உயர் ஆணையாளரின் இலங்கை குறித்த அறிக்கையைக் கனடா வரவேற்று, இலங்கை 40/1 ஆம் இலக்க தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்குவதன் முக்கியத்துவத்தை ஏற்றுக்கொள்கிறது.

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகம் அமைக்கப்பட்டமை, குடிமக்களின் சில காணிகள் விடுவிக்கப்பட்டமை, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த சில கைதிகள் விடுவிக்கப்பட்டமை, இழப்பீடுகளுக்கான அலுவலகத்தை அமைப்பதற்கு எடுக்கப்படும் முயற்சிகள் என இலங்கை எடுத்துள்ள நடவடிக்கைகளை நாம் கருத்திற் கொண்டுள்ளோம். ஆனால், ஆயுதப் போர் முடிவுக்கு வந்தமையின் பத்தாம் ஆண்டு நிறைவை நாம் நினைவுகூரும் இந்தச் சந்தர்ப்பத்தில, இந்த ஆரம்பக் கட்ட நடவடிக்கைகள் போதுமானவையல்ல.

பொறுப்புக் கூறலை முன்னெடுப்பதில் கணிசமான முன்னேற்றம் ஏற்படாதமையாலும், இலங்கை அரசு ஒன்றுடன் ஒன்று முரண்படும் கருத்துக்களை வெளியிட்டு வருவதாலும் பாதிக்கப்பட்டோர் அதிக விரக்தியடைந்துள்ளதை நாம் ஒப்புக்கொள்கிறோம். சமாதானத்திற்கும், மீளிணக்கத்திற்கும், பாதிக்கப்பட்டவர்களின் நம்பிக்கையைப் பெற்ற பொறுப்புக்கூறல் நடைமுறை இன்றியமையாதது.

இலங்கை பின்வரும் நடவடிக்கைகளை தாமதமின்றி எடுக்கவேண்டுமென நாம் ஊக்குவிக்கிறோம்:

- சர்வதேச சட்டங்களின் மீறல்களை குற்றங்களாக பிரகடனம் செய்யும் உள்நாட்டுச் சட்டத்தை நிறைவேற்றி, குற்றம் புரிவோர் தண்டனையில் இருந்து தப்பும் நிலையை மாற்றவேண்டும். நடவடிக்கை எடுப்பதற்கான கால வரையறை இன்றி இந்தச் சட்டம் அமையவேண்டும்
- சர்வதேச விசாரணையாளர்கள், வழக்குத் தொடுனர்கள், நீதிபதிகள் ஆகியோரின் பங்களிப்புடன், சர்வதேச சட்ட மீறல்களுக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கான சிறப்பு வழக்கறிஞரைக் கொண்ட நீதிப் பொறிமுறை ஒன்றை அமைக்கவேண்டும்

மனித உரிமைச் சபையின் 30/1 தீர்மானம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுவது நீதி வழங்குவதற்கு முக்கியமானது. தம் மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளை முழுமையாக நிறைவேற்றுவதற்கான கால அட்டவணையுடனான மூலோபாயம் ஒன்றை வெளியிடுமாறு இலங்கை அரசைக் கனடா வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது. புதுப்பிக்கப்படும் தீர்மானத்தில் இலங்கை நிறைவேற்றவேண்டிய இந்தக் கடப்பாடுகள் தொடர்பாக உதவி வழங்கக் கனடா தயாராக இருக்கிறது.

Permanent Mission of Canada
to the United Nations
and the World Trade Organization

Mission permanente du Canada
auprès des Nations Unies
et de l'Organisation mondiale du commerce

**March 20, 2019**

**Intervention by Canada at the 40th Session of the UN Human Rights Council**

**Interactive Dialogue on the Report of the Office of the High Commissioner for Human Rights,
"Promoting reconciliation, accountability and human rights in Sri Lanka"**

*Intervention delivered by Gary Anandasangaree, Parliamentary Secretary to the Minister of Canadian Heritage and Multiculturalism*

"Canada welcomes the High Commissioner's report on Sri Lanka and acknowledges the importance of Sri Lanka's co-sponsorship of Resolution 40/1.

We note the steps taken by Sri Lanka in establishing the Office of Missing Persons, the release of some civilian lands, the release of some prisoners held under the Prevention of Terrorism Act, and efforts to establish an Office of Reparations. These initial steps, however, are insufficient as we mark the tenth anniversary of the end of the armed conflict.

We acknowledge the increased level of frustration of the victims by the lack of substantive progress in advancing accountability and compounded by inconsistent messaging from Sri Lanka. A process of accountability that has the trust and confidence of the victims is critical to peace and reconciliation.

We encourage Sri Lanka to take the following steps without delay:

- End impunity by enacting domestic legislation that criminalizes violations of international law without statutes of limitation
- Establish a judicial mechanism with special counsel to prosecute violations of international law with the involvement of international investigators, prosecutors and judges.

Justice demands that resolution 30/1 be implemented in its entirety. Canada urges the government of Sri Lanka to set a time-bound strategy for full implementation of the commitments it has made to its own people. Canada stands ready to support Sri Lanka in its efforts to meet these commitments under the renewed resolution."